# திருவாய் மொழி நான்காம் பத்து

திருவாய் மொழி நான்காம் பத்து

முதல் திருமொழி

3123:##
ஒரு நாயகமாய்* ஓட உலகுடன் ஆண்டவர்,*
கருநாய் கவர்ந்த காலர்* சிதைகிய பானையர்,*
பெருநாடு காண* இம்மையிலே பிச்சை தாம்கொள்வர்,*
திருநாரணன்தாள்* காலம் பெறச் சிந்தித்து உய்ம்மினோ. 4.1.1

3124:
உய்ம்மின் திறைகொணர்ந்து* என்று உலகாண்டவர்,* இம்மையே
தம்மின் சுவை மடவாரைப்* பிறர் கொள்ளத் தாம்விட்டு*
வெம்மின் ஒளிவெயில்* கானகம்போய்க்குமை தின்பர்கள்,*
செம்மின் முடித் திருமாலை* விரைந்து அடி சேர்மினோ. 4.1.2

3125:
அடிசேர் முடியினர் ஆகி* அரசர்கள் தாம்தொழ,*
இடிசேர் முரசங்கள்* முற்றத்தியம்ப இருந்தவர்,*
பொடிசேர்த்துகளாய் போவர்கள்* ஆதலில் நொக்கென*
கடிசேர் துழாய்முடி* கண்ணன் கழல்கள் நினைமினோ. 4.1.3

3126:
நினைப்பான் புகில் கடல் எக்கலின்* நுண் மணலிற்பலர்,*
எனைத்தோர் உகங்களும்* இவ்வுலகாண்டு கழிந்தவர்,*
மனைப்பால் மருங்கற* மாய்தலல்லால் மற்றுக் கண்டிலம்,*
பனைத்தாள் மதகளிறட்டவன்* பாதம் பணிமினோ. 4.1.4

3127:
பணிமின் திருவருள் என்னும்* அம்சீதப் பைம்பூம்பள்ளி,*
அணிமென் குழலார்* இன்பக்கலவி அமுதுண்டார்,*
துணிமுன்பு நாலப்* பல்லேழையர் தாம் இழிப் பச்செல்வர்,*
மணிமின்னு மேனி* நம் மாயவன் பேர்சொல்லி வாழ்மினோ. 4.1.5

3128:
வாழ்ந்தார்கள் வாழ்ந்தது* மாமழை மொக்குளின் மாய்ந்துமாய்ந்து,*
ஆழ்ந்தாரென்றல்லால்* அன்று முதலின்றறுதியா,*
வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர்* என்பதில்லை நிற்குறில்,*
ஆழ்ந்தார் கடல்பள்ளி* அண்ணல் அடியவர் ஆமினோ. 4.1.6

3129:
ஆமின் சுவையவை* ஆறொடடி சிலுண்டார்ந்தபின்,*
தூமென் மொழிமடவார்* இரக்கப்பின்னும் துற்றுவார்,*
‘ஈமின் எமக்கொரு துற்‘றென்று* இடறுவராதலின்,*
கோமின் துழாய்முடி* ஆதியஞ்சோதி குணங்களே. 4.1.7

3130:
குணங்கொள் நிறைபுகழ் மன்னர்* கொடைக்கடன் பூண்டிருந்து,*
இணங்கி உலகுடனாக்கிலும்* ஆங்கவனை இல்லார்,*
மணங்கொண்ட போகத்து மன்னியும்* மீள்வர்கள் மீள்வில்லை,*
பணங்கொள் அரவணையான்* திருநாமம் படிமினோ. 4.1.8

3131:
படிமன்னு பல்கலன் பற்றோடறுத்து* ஐம் புலன்வென்று,*
செடிமன்னு காயம்செற்றார்களும்* ஆங்கவனையில்லார்,*
குடிமன்னு மிஞ்சுவர்க்க மெய்தியும்* மீள்வர்கள் மீள்வில்லை,*
கொடிமன்னு புள்ளுடை* அண்ணல் கழல்கள் குறுகுமினோ. 4.1.9

3132:
குறுக மிகவுணர்வத்தொடு நோக்கி* எல்லாம்விட்ட,*
இறுகல் இறப்பென்னும்* ஞானிக்கும் அப்பயனில்லையேல்,*
சிறுக நினைவதோர் பாசமுண்டாம்* பின்னும் வீடில்லை,*
மறுபகலில் ஈசனைப் பற்றி* விடாவிடில் வீடஃதே. 4.1.10

3133:##
அஃதே உய்யப் புகுமாறென்று* கண்ணன் கழல்கள்மேல்,*
கொய்பூம் பொழில்சூழ்* குருகூர்ச்சடகோபன் குற்றேவல்,*
செய்கோலத்தாயிரம்* சீர்த்தொடைப்பாடல் இவைபத்தும்,*
அஃகாமல் கற்பவர்* ஆழ்துயர் போய் உய்யற் பாலரே. (2) 4.1.11

இரண்டாம் திருமொழி

3134:##
பாலனாய்* ஏழுலகுண்டு பரிவின்றி,*
ஆலிலை* அன்ன வசஞ்செய்யும் அண்ணலார்,*
தாளிணை மேலணி* தண்ணந் துழாயென்றே
மாலுமால்,* வல்வினையேன்* மட வல்லியே. (2) 4.2.1

3135:
வல்லிசேர் நுண்ணிடை* ஆய்ச்சியர் தம்மொடும்,*
கொல்லைமை செய்து* குரவை பிணைந்தவர்,*
நல்லடி மேலணி* நாறு துழாயென்றே
சொல்லுமால்,* சூழ்வினையாட்டியேன் பாவையே. 4.2.2

3136:
பாவியல் வேத* நன் மாலை பலகொண்டு,*
தேவர்கள் மாமுனிவர்* இறைஞ்ச நின்ற*
சேவடி மேலணி* செம்பொன் துழாயென்றே
கூவுமால்,* கோள்வினை ஆட்டியேன் கோதையே. 4.2.3

3137:
கோதில வண்புகழ்* கொண்டு சமயிகள்,*
பேதங்கள் சொல்லிப்* பிதற்றும் பிரான்பரன்,*
பாதங்கள் மேலணி* பைம்பொன் துழாயென்றே
ஓதுமால்,* ஊழ்வினையேன்* தடந் தோளியே. 4.2.4

3138:
தோளிசேர் பின்னை பொருட்டு* எரு தேழ்தழீஇக்
கோளியார்* கோவலனார்* குடக் கூத்தனார்,*
தாளிணை மேலணி* தண்ணந்துழாயென்றே
நாளுநாள்,* நைகின்றதால்* என்தன் மாதரே. 4.2.5

3139:
மாதர்மா மண்மடந்தை பொருட்டு* ஏனமாய்,*
ஆதியங் காலத்து* அகலிடம் கீண்டவர்,*

பாதங்கள் மேலணி* பைம்பொன் துழாயென்றே
ஓதுமால்,* எய்தினள்* என்தன் மடந்தையே.   4.2.6

3140:
மடந்தையை* வண்கமலத் திருமாதினே,*
தடங்கொள்தார் மார்பினில்* வைத்தவர் தாளின்மேல்,*
வடங்கொள்பூந் தண்ணந் துழாய்மலர்க்கே* இவள்
மடங்குமால்,* வாணுதலீர்! என் மடக்கொம்பே. 4.2.7

3141:
கொம்புபோல் சீதை பொருட்டு* இலங்கைநகர்*
அம்பெரி உய்த்தவர்* தாளிணை மேலணி,*
வம்பவிழ் தண்ணந்துழாய்* மலர்க்கே இவள்-
நம்புமால்,* நானிதற்கு என்செய்கேன்* நங்கைமீர்!   4.2.8

3142:
நங்கைமீர்! நீரும்* ஓர் பெண்பெற்று நல்கினீர்,*
எங்கனே சொல்லுகேன்* யான்பெற்ற ஏழையை,*
சங்கென்னும் சக்கரமென்னும்* துழாயென்னும்,*
இங்கனே சொல்லும்* இராப்பகல் என்செய்கேன்?   4.2.9

3143:
என்செய்கேன் என்னுடைப்பேதை* என் கோமளம்,*
என்சொல்லும்* என்வசமும் அல்லள் நங்கைமீர்,*
மின்செய்பூண் மார்பினன்* கண்ணன் கழல்துழாய்,*
பொன்செய்பூண்* மென்முலைக் கென்று மெலியுமே.   4.2.10

3144:##
மெலியும் நோய் தீர்க்கும்* நம் கண்ணன் கழல்கள்மேல்,*
மலிபுகழ் வண்குருகூர்* சடகோபன்சொல்,*
ஒலிபுகழ் ஆயிரத்து* இப்பத்தும் வல்லவர்,*
மலிபுகழ் வானவர்க்காவர்* நற்கோவையே.(2)  4.2.11

மூன்றும் திருமொழி

3145:##
கோவை வாயாள் பொருட்டு* ஏற்றின் எருத்தம் இறுத்தாய்,* மதிளிலங்கைக்
கோவை வீயச் சிலைகுனித்தாய்!* குலநல் யானை மருப்பொசித்தாய்,*
பூவை வீயா நீர்தூவிப்* போதால் வணங்கேனேலும்,* நின்
பூவை வீயாம் மேனிக்குப்* பூசும் சாந்து என் நெஞ்சமே.   (2)   4.3.1

3146:
பூசும் சாந்து என் நெஞ்சமே* புனையும் கண்ணி எனதுடைய,*
வாசகம்செய் மாலையே* வான் பட்டாடையும் அஃதே,*
தேசமான அணிகலனும்* என்கைகூப்புச் செய்கையே,*
ஈசன் ஞாலம் உண்டுமிழ்ந்த* எந்தை ஏக மூர்த்திக்கே.   4.3.2

3147:
ஏக மூர்த்தி இருமூர்த்தி* மூன்று மூர்த்தி பலமூர்த்தி-
ஆகி,* ஐந்து பூதமாய் இரண்டு சுடராய்* அருவாகி,*
நாகம் ஏறி நடுக்கடலுள் துயின்ற *நாராயணனே,* உன்-
ஆகம் முற்றும் அகத்தடக்கி* ஆவியல்லல் மாய்த்ததே.   4.3.3

3148:
மாய்த்தல் எண்ணி வாய்முலை தந்த* மாயப் பேயுயிர்-
மாய்த்த,* ஆய மாயனே! *வாமனனே மாதவா,*
பூத்தண் மாலை கொண்டு* உன்னைப் போதால் வணங்கேனேலும்,* நின்
பூத்தண் மாலை நெடுமுடிக்குப்* புனையும் கண்ணி எனதுயிரே. 4.3.4

3149:
கண்ணி எனதுயிர்* காதல் கனகச் சோதி முடிமுதலா,*
எண்ணில் பல்கலன்களும்* ஏலு மாடையும் அஃதே,*
நண்ணி மூவுலகும்* நவிற்றும் கீர்த்தியும் அஃதே,*
கண்ணன் எம்பிரானெம்மான்* கால சக்கரத் தானுக்கே. 4.3.5

3150:
கால சக்கரத்தொடு* வெண்சங்கம் கையேந்தினாய்,*
ஞால முற்றும் உண்டுமிழ்ந்த* நாராயணனே!' என்றென்று,*
ஓலமிட்டு நானழைத்தால்* ஒன்றும் வாராயாகிலும்,*
கோலமாம் என் சென்னிக்கு* உன் கமலம் அன்ன குரைகழலே. 4.3.6

3151:
குரைகழல்கள் நீட்டி* மண் கொண்ட கோல வாமனா,*
குரைகழல் கை கூப்புவார்கள்* கூட நின்ற மாயனே,*
விரைகொள் பூவும் நீரும்கொண்டு* ஏத்த மாட்டேனேலும்,* உன்
உரைகொள் சோதித் திருவுருவம்* என்ன தாவி மேலதே. 4.3.7

3152:
என்னதாவி மேலையாய்* ஏர்கொள் ஏழ் உலகமும்,*
துன்னி முற்றுமாகி நின்ற* சோதி ஞான மூர்த்தியாய்,*
உன்னது என்னதாவியும்* என்னது உன்னதாவியும்*
இன்ன வண்ணமே நின்றாய்* என்றுரைக்க வல்லேனே? 4.3.8

3153:
உரைக்க வல்லேன் அல்லேன்* உன் உலப்பில் கீர்த்தி வெள்ளத்தின்*
கரைக்கண் என்று செல்வன்நான்?* காதல் மையல் ஏறினேன்,*
புரைப்பிலாத பரம்பரனே!* பொய்யிலாத பரஞ்சுடரே,*
இரைத்து நல்ல மேன்மக்கள் ஏத்த* யானும் ஏத்தினேன். 4.3.9

3154:
யானும் ஏத்தி* ஏழுலகும் முற்றும் ஏத்தி,* பின்னையும்
தானும் ஏத்திலும்* தன்னை ஏத்தஏத்த எங்கெய்தும்,*
தேனும் பாலும் கன்னலும்* அமுதுமாகித் தித்திப்ப,*
யானும் எம்பிரானையே ஏத்தினேன்* யானுய்வானே. 4.3.10

3155:##
உய்வுபாயம் மற்றின்மை தேறிக்* கண்ணன் ஒண்கழல்கள்மேல்*
செய்ய தாமரைப் பழனத்* தென்னன் குருகூர்ச் சடகோபன்,*
பொய்யில் பாடல் ஆயிரத்துள்* இவையும் பத்தும் வல்லார்கள்,*
வையம் மன்னி வீற்றிருந்து* விண்ணும் ஆள்வர் மண்ணூடே. (2) 4.3.11

நான்காம் திருமொழி

3156:##
மண்ணையிருந்து துழாவி* 'வாமனன் மண்ணிது' என்னும்,*
விண்ணைத்தொழுது அவன் மேவு* வைகுந்தம் என்று கை காட்டும்,*

கண்ணையுண்ணீர் மல்க நின்று* 'கடல்வண்ணன்' என்னும் அன்னே!* என்
பெண்ணைப் பெருமயல் செய்தாற்கு* என்செய்கேன் பெய் வளையீரே (2) 4.4.1

3157:
பெய்வளைக் கைகளைக் கூப்பிப்* 'பிரான்கிடக்கும் கடல்' என்னும்,*
செய்யதோர் ஞாயிற்றைக் காட்டிச்* 'சிரீதரன் மூர்த்தி ஈதென்னும்,*
நையும் கண்ணீர்மல்க நின்று* 'நாரணன்' என்னும்அன்னே,* என்
தெய்வ உருவிற் சிறுமான்* செய்கின்றது ஒன்றறியேனே. 4.4.2

3158:
அறியும் செந் தீயைத் தழுவி* 'அச்சுதன்' என்னும்மெய்வேவாள்,*
எறியும்தண் காற்றைத் தழுவி* 'என்னுடைக் கோவிந்தன்' என்னும்,*
வெறிகொள் துழாய்மலர் நாறும்* வினையுடை யாட்டியேன் பெற்ற*
செறிவளை முன்கைச் சிறுமான்* செய்கின்றது என்கண்ணுக்கு ஒன்றே. 4.4.3

3159:
ஒன்றிய திங்களைக் காட்டி* 'ஒளிமணி வண்ணனே' என்னும்*
நின்ற குன்றத்தினை நோக்கி* 'நெடுமாலே! வா'என்று கூவும்,*
நன்று பெய்யும் மழை காணில்* 'நாரணன் வந்தான்'என்று ஆலும்,*
என்றின மையல்கள் செய்தார்* என்னுடைக் கோமளத்தையே. 4.4.4

3160:
கோமளவான் கன்றைப் புல்கிக்* 'கோவிந்தன் மேய்த்தன' என்னும்,*
போமிள நாகத்தின் பின்போய்* அவன்கிடக்கை ஈதென்னும்,*
ஆமள வொன்றும் அறியேன்* அருவினை ஆட்டியேன் பெற்ற,*
கோமள வல்லியை மாயோன்* மால்செய்து செய்கின்ற கூத்தே. 4.4.5

3161:
கூத்தர் குடமெடுத்து ஆடில்* 'கோவிந்தனாம்' எனா ஓடும்,*
வாய்த்த குழலோசை கேட்கில்* 'மாயவன்' என்று மையாக்கும்,*
ஆய்ச்சியர் வெண்ணெய்கள் காணில்* அவனுண்ட வெண்ணெய் ஈதென்னும்,*
பேய்ச்சி முலை சுவைத்தார்க்கு* என் பெண்கொடி யேறிய பித்தே! 4.4.6

3162:
ஏறிய பித்தினோடு* எல்லா உலகும் கண்ணன் படைப்பென்னும்*
நீறு செவ்வேயிடக் காணில்* 'நெடுமால் அடியார்' என்றோடும்,*
நாறு துழாய்மலர் காணில்* நாரணன் கண்ணி ஈதென்னும்,*
தேறியும் தேறாது மாயோன்* திறத்தனளே இத் திருவே. 4.4.7

3163:
திருவுடை மன்னரைக் காணில்* 'திருமாலைக் கண்டேனே' என்னும்,*
உருவுடை வண்ணங்கள் காணில்* 'உலகளந்தான்'என்று துள்ளும்,*
கருவுடைத் தேவில்களெல்லாம்* 'கடல்வண்ணன் கோயிலே' என்னும்*
வெருவிலும் வீழ்விலும் ஓவாள்* கண்ணன் கழல்கள் விரும்புமே. 4.4.8

3164:
விரும்பிப் பகவரைக் காணில்* 'வியலிடம் உண்டானே!' என்னும்,*
கரும்பெரு மேகங்கள் காணில்* 'கண்ணன்' என்றேறப் பறக்கும்,*
பெரும்புல ஆநிரை காணில்* 'பிரானுளன்' என்று பின்செல்லும்,*
அரும்பெறல் பெண்ணினை மாயோன்* அலற்றி அயர்ப்பிக்கின்றானே! 4.4.9

3165:
அயர்க்கும் சுற்றும் பற்றி நோக்கும்* அகலவே நீள் நோக்குக் கொள்ளும்,*
வியர்க்கும் மழைக்கண் துளும்ப* வெவ்வுயிர்க் கொள்ளும் மெய்சோரும்,*

பெயர்த்தும்‘ கண்ணா!‘ என்று பேசும்,* ‘பெருமானே! வா!‘என்று கூவும்,*
மயல்பெருங் காதலென் பேதைக்கு* என்செய்கேன் வல்வினை யேனே! 4.4.10

3166:##
வல்வினை தீர்க்கும் கண்ணனை* வண்குருகூர்ச் சடகோபன்,*
சொல் வினையால் சொன்ன பாடல்* ஆயிரத்துள் இவை பத்தும்,*
நல்வினையென்று கற்பார்கள்* நலனிடை வைகுந்தம் நண்ணி,*
தொல்வினை தீர எல்லாரும் * தொழுதெழ வீற்றிருப்பாரே. (2) 4.4.11

ஐந்தாம் திருமொழி

3167:##
வீற்றிருந்து ஏழுலகும்* தனிக்கோல் செல்ல, வீவில்சீர்,*
ஆற்றல்மிக்காளும் அம்மானை* எம்மா பிளந்தான் தன்னை,*
போற்றியென்றே கைகளாரத்* தொழுது சொல்மாலைகள்,*
ஏற்ற நோற்றேற்கு* இனியென்னகுறை எழுமையுமே? (2) 4.5.1

3168:
மைய கண்ணாள் மலர்மேல் உறைவாள்* உறைமார்பினன்,*
செய்ய கோலத் தடங்கண்ணன்* விண்ணோர் பெருமான் தன்னை*
மொய்ய சொல்லால் இசைமாலைகள் ஏத்தி* உள்ளப் பெற்றேன்,*
வெய்ய நோய்கள் முழுதும்* வியன்ஞாலத்து வீயவே. 4.5.2

3169:
வீவில் இன்பமிக* எல்லை நிகழ்ந்த நம் அச்சுதன்,*
வீவில் சீரன் மலர்க்கண்ணன்* விண்ணோர் பெருமான்தன்னை,*
வீவில் காலம் இசைமாலைகள் ஏத்தி* மேவப்பெற்றேன்,*
வீவில் இன்பமிக* எல்லை நிகழ்ந்தனன் மேவியே. 4.5.3

3170:
மேவி நின்று தொழுவார்* வினைபோக மேவும்பிரான்,*
தூவியம் புள்ளுடையான்* அடலாழியம்மான் தன்னை,
நாவியலால் இசை மாலைகள் ஏத்தி* நண்ணப்பெற்றேன்,*
ஆவி என்னாவியை* யானறியேன் செய்தவாற்றையே. 4.5.4

3171:
ஆற்ற நல்ல வகைகாட்டும் அம்மானை,* அமரர்தம்–
ஏற்றை* எல்லாப் பொருளும் விரித்தானை எம்மான்தன்னை,*
மாற்ற மாலை புனைந்தேத்தி* நாளும் மகிழ்வெய்தினேன்,*
காற்றின் முன்னம் கடுகி* வினைநோய்கள் கரியவே. 4.5.5

3172:
கரிய மேனிமிசை* வெளிய நீறு சிறிதேயிடும்,*
பெரிய கோலத் தடங்கண்ணன்* விண்ணோர் பெருமான்தன்னை,*
உரிய சொல்லால் இசைமாலைகள் ஏத்தி* உள்ளப் பெற்றேற்கு,*
அரியதுண்டோ எனக்கு* இன்று தொட்டும் இனியென்றுமே? 4.5.6

3173:
என்றும் ஒன்றாகி* ஒத்தாரும் மிக்கார்களும்,* தன் தனக்கு–
இன்றி நின்றானை* எல்லா உலகும் உடையான் தன்னை,*
குன்றம் ஒன்றால் மழைகாத்தபிரானைச்* சொல் மாலைகள்,*
நன்று சூட்டும் விதியெய்தினம்* என்ன குறைநமக்கே? 4.5.7

3174:
நமக்கும் பூவின்மிசை நங்கைக்கும்* இன்பனே,* ஞாலத்தார்–
தமக்கும்* வானத்தவர்க்கும் பெருமானே,* தண் தாமரை–
சுமக்கும்* பாதப் பெருமானைச்* சொல்மாலைகள், சொல்லுமாறு–
அமைக்க வல்லேற்கு* இனியாவர் நிகர் அகல்வானத்தே? 4.5.8

3175:
வானத்தும் வானத்துள்ளும்பரும்* மண்ணுள்ளும் மண்ணின்கீழ்த்
தானத்தும்,* எண்திசையும் தவிராது* நின்றான்தன்னை,*
கூனற் சங்கத் தடக்கையவனைக்* குடமாடியை வானக்
கோனைக்,* கவிசொல்ல வல்லேற்கு* இனிமாறுண்டோ? 4.5.9

3176:
உண்டும் உமிழ்ந்தும் கடந்தும் இடந்தும்* கிடந்தும் நின்றும்,*
கொண்ட கோலத்தொடு வீற்றிருந்தும்* மணங்கூடியும்,*
கண்ட வாற்றால் தனதே* உலகென நின்றான்தன்னை,*
வண்தமிழ் நூற்க நோற்றேன்* அடியார்க்கு இன்பமாரியே. 4.5.10

3177:##
மாரி மாறாத தண்ணம்மலை* வேங்கடத்து அண்ணலை,*
வாரி மாறாத பைம்பூம் பொழில்சூழ்* குருகூர்நகர்,*
காரி மாறன் சடகோபன்* சொல்லாயிரத்து இப்பத்தால்,*
வேரி மாறாத பூமேலிருப்பாள்* வினைதீர்க்குமே. (2) 4.5.11

ஆறாம் திருமொழி

3178:##
தீர்ப்பாரையாம் இனி* எங்ஙனம் நாடுதும் அன்னைமீர்,*
ஓர்ப்பால் இவ் வொண்ணுதல்* உற்ற நல்நோயிது தேறினோம்,*
போர்ப்பாகு தான்செய்து* அன்றைவரை வெல்வித்த,* மாயப்போர்த்
தேர்ப்பாகனார்க்கு* இவள் சிந்தை துழாய்த் திசைக்கின்றதே. 4.6.1

3179:
திசைக்கின்றதே இவள் நோய்* இது மிக்க பெருந்தெய்வம்,*
இசைப்பின்றி* நீரணங்காடும் இளந்தெய்வம் அன்றிது,*
திசைப்பின்றியே* சங்கு சக்கர என்றிவள் கேட்க,* நீர்
இசைக்கிற்றிராகில்* நன்றேஇல் பெறுமிது காண்மினே. 4.6.2

3180:
இதுகாண்மின் அன்னைமீர்!* இக்கட்டுவிச்சி சொற்கொண்டு,* நீர்
எதுவானும் செய்து* அங்கோர் கள்ளும் இறைச்சியும் தூவேன்மின்,*
மதுவார் துழாய்முடி* மாயப்பிரான் கழல் வாழ்த்தினால்,*
அதுவே இவளுற்ற நோய்க்கும்* அருமருந்தாகுமே. 4.6.3

3181:
மருந்தாகுமென்று அங்கோர்* மாய வலவை சொற்கொண்டு,* நீர்
கருஞ்சோறும் மற்றைச் செஞ்சோறும்* களனிழைத் தென்பயன்?*
ஒருங்காகவே உலகேழும்* விழுங்கி உமிழ்ந்திட்ட,*
பெருந்தேவன் பேர்சொல்லகிற்கில்* இவளைப் பெறுதிரே. 4.6.4

3182:
இவளைப் பெறும்பரிசு* இவ்வணங்காடு தலன்றந்தோ,*
குவளைத் தடங்கண்ணும்* கோவைச்செவ்வாயும் பயந்தனள்,*

கவளக் கடாக் களிறட்டபிரான்* திரு நாமத்தால்,*
தவளப் பொடிக்கொண்டு* நீரிட்டிடுமின் தணியுமே. 4.6.5

3183:
தணியும் பொழுதில்லை* நீரணங்காடுதிர் அன்னைமீர்,*
பிணியும் ஒழிகின்றது இல்லை* பெருகும் இதுவல்லால்,*
மணியின் அணிநிற மாயன்* தமரடி நீறுகொண்டு,*
அணிய முயலின்* மற்றில்லைகண்டீர் இவ்வணங்குக்கே. 4.6.6

3184:
அணங்குக்கு அருமருந்து என்று* அங்கோர் ஆடும்கள்ளும்பராய்*
துணங்கை எறிந்து* நும் தோள்குலைக்கப்படும் அன்னைமீர்,*
உணங்கல் கெடக்* கழுதை உதடாட்டம் கண்டென்பயன்?*
வணங்கீர்கள் மாயப் பிரான்* தமர் வேதம் வல்லாரையே. 4.6.7

3185:
வேதம் வல்லார்களைக் கொண்டு* விண்ணோர்பெருமான் திருப்-
பாதம் பணிந்து,* இவள் நோய்* இது தீர்த்துக் கொள்ளாதுபோய்*
ஏதம் பறைந்து அல்ல செய்து* கள்ளூடு கலாய்த்தூய்,*
கீத முழவிட்டு* நீரணங்காடுதல் கீழ்மையே. 4.6.8

3186:
கீழ்மையினால் அங்கு ஓர்* கீழ்மகனிட்ட முழவின்கீழ்,*
நாழ்மை பலசொல்லி* நீரணங்காடும் பொய்காண்கிலேன்,*
ஏழ்மைப் பிறப்புக்கும் சேமம்* இந் நோய்க்கும் ஈதே மருந்து,*
ஊழ்மையில் கண்ணபிரான்* கழல் வாழ்த்துமின் உன்னித்தே. 4.6.9

3187:
உன்னித்து மற்றொரு தெய்வம்தொழாள்* அவனையல்லால்,*
நும்மிச்சை சொல்லி* நும் தோள்குலைக்கப்படும் அன்னைமீர்,*
மன்னப் படும் மறைவாணனை* வண் துவராபதி-
மன்னனை,* ஏத்துமின் ஏத்துதலும்* தொழுதாடுமே. 4.6.10

3188:##
தொழுதாடி தூமணி வண்ணனுக்கு* ஆட்செய்து நோய்தீர்ந்த*
வழுவாத தொல்புகழ்* வண்குருகூர்ச் சடகோபன்,* சொல்
வழுவாத ஆயிரத்துள்* இவை பத்து வெறிகளும்,*
தொழுதாடிப் பாடவல்லார்* துக்க சீலம் இலர்களே. 4.6.11

ஏழாம் திருமொழி

3189:##
'சீலம் இல்லாச் சிறியனேலும்* செய்வினையோ பெரிதால்,*
ஞாலம் உண்டாய் ஞானமூர்த்தி* 'நாராயணா!' என்றென்று,*
காலந் தோறும் யானிருந்து* கைதலை பூசலிட்டால்*
கோல மேனி காண வாராய்* கூவியும் கொள்ளாயே. (2) 4.7.1

3190:
'கொள்ள மாளா இன்ப வெள்ளம்* கோதில தந்திடும்,* என்
வள்ளலேயோ! வையங் கொண்ட* வாமனாவோ!'என்றென்று,*
நள்ளிராவும் நண்பகலும்* நானிருந்து ஓலமிட்டால்,*
கள்ள மாயா! உன்னை* என்கண் காண வந்தீயாயே. 4.7.2

3191:
'ஈவிலாத தீவினைகள்* எத்தனை செய்தனன்கொல்?*
தாவி வையம் கொண்ட எந்தாய்!* தாமோதரா!'என்றென்று*
கூவிக் கூவி நெஞ்சுருகிக்* கண்பனி சோர நின்றால்,*
பாவி நீஎன்று ஒன்று சொல்லாய்* பாவியேன் காணவந்தே. 4.7.3

3192:
'காண வந்து என் கண்முகப்பே* தாமரைக் கண்பிறழ,*
ஆணி செம்பொன் மேனியெந்தாய்!* நின்றருளாய்' என்றென்று,*
நாணமில்லாச் சிறுதகையேன்* நான் இங்கு அலற்றுவதென்,*
பேணி வானோர் காணமாட்டாப்* பீடுடை அப்பனையே? 4.7.4

3193:
அப்பனே! அடலாழியானே,* ஆழ் கடலைக்கடைந்த
துப்பனே,* உன் தோள்கள் நான்கும்* கண்டிடக் கூடுங்கொல்? என்று,*
எப்பொழுதும் கண்ண நீர்கொண்டு* ஆவி துவர்ந்து துவர்ந்து,*
இப்பொழுதே வந்திடாயென்று* ஏழையேன் நோக்குவனே. 4.7.5

3194:
நோக்கி நோக்கி உன்னைக் காண்பான்* யான் எனதாவியுள்ளே,*
நாக்கு நீள்வன் ஞானமில்லை* நாள்தோறும் என்னுடைய,*
ஆக்கையுள்ளும் ஆவியுள்ளும்* அல்ல புறத்தினுள்ளும்,*
நீக்க மின்றி எங்கும் நின்றாய்!* நின்னையறிந்தறிந்தே. 4.7.6

3195:
அறிந்தறிந்து தேறித் தேறி* யான் எனதாவியுள்ளே,*
நிறைந்த ஞானமூர்த்தியாயை* நின்மலமாக வைத்து,*
பிறந்தும் செத்தும் நின்றிடறும்* பேதைமை தீர்ந்தொழிந்தேன்*
நறுந்துழாயின் கண்ணியம்மா!* நானுன்னைக் கண்டுகொண்டே! 4.7.7

3196:
கண்டு கொண்டு என் கைகளார* நின்திருப்பாதங்கள் மேல்*,
என் திசையுமுள்ள பூக்கொண்டு* ஏத்தி உகந்துகந்து,*
தொண்டரோங்கள் பாடியாடச்* சூழ்கடல் ஞாலத்துள்ளே,*
வண்துழாயின் கண்ணி வேந்தே!* வந்திடகில்லாயே. 4.7.8

3197:
இடகிலேன் ஒன்றட்டகில்லேன்* ஐம்புலன் வெல்லகில்லேன்,*
கடவனாகிக் காலந்தோறும்* பூப்பறித்து ஏத்தகில்லேன்,*
மடவன் நெஞ்சம் காதல் கூர* வல்வினையேன் அயர்ப்பாய்,*
தடவுகின்றேன் எங்குக் காண்பன்* சக்கரத்து அண்ணலையே? 4.7.9

3198:
சக்கரத்து அண்ணலே என்று* தாழ்ந்து கண்ணீர் ததும்ப,*
பக்கம் நோக்கி நின்றலந்தேன்* பாவியேன் காண்கின்றிலேன்,*
மிக்க ஞான மூர்த்தியாய* வேத விளக்கினை,* என்
தக்க ஞானக் கண்களாலே* கண்டு தழுவுவனே. 4.7.10

3199:##
தழுவி நின்ற காதல்தன்னால்* தாமரைக் கண்ணன்தன்னை,*
குழுவு மாடத் தென்குருகூர்* மாறன் சடகோபன்,* சொல்
வழுவிலாத ஒண்தமிழ்கள்* ஆயிரத்துள் இப்பத்தும்,*
தழுவப் பாடி யாட வல்லார்* வைகுந்தம் ஏறுவரே. 4.7.11

எட்டாம் திருமொழி

3200:##
ஏருளும் இறையோனும்* திசைமுகனும் திருமகளும்,*
கூருளும் தனியுடம்பன்* குலங்குலமா அசுரர்களை,*
நீருகும் படியாக* நிருமித்துப் படைதொட்ட,*
மாறுளன் கவராத* மணிமாமை குறைவிலமே. (2) 4.8.1

3201:
மணிமாமை குறைவில்லா* மலர்மாதர் உறைமார்வன்,*
அணிமானத் தடவரைத்தோள்* அடலாழித் தடக்கையன்,*
பணிமானம் பிழையாமே* அடியேனைப் பணிகொண்ட,*
மணிமாயன் கவராத* மடநெஞ்சால் குறைவிலமே. 4.8.2

3202:
மடநெஞ்சால் குறைவில்லா* மகள்தாய் செய்தொருபேய்ச்சி,*
விடநஞ்ச முலைசுவைத்த* மிகுஞானச் சிறுகுழவி,*
படநாகத் தணைக்கிடந்த* பருவரைத்தோள் பரம்புருடன்,*
நெடுமாயன் கவராத* நிறையினால் குறைவிலமே. 4.8.3

3203:
நிறையினால் குறைவில்லா* நெடும்பணைத்தோள் மடப்பின்னை,*
பொறையினால் முலையணைவான்* பொருவிடைஏழ் அடர்த்துகந்த,*
கறையினார் துவருடுக்கை* கடையாவின் கழிகோல்கை,*
சறையினார் கவராத* தளிர்நிறத்தால் குறைவிலமே. 4.8.4

3204:
தளிர்நிறத்தால் குறைவில்லாத்* தனிச்சிறையில் விளப்புற்ற,*
கிளிமொழியாள் காரணமாக்* கிளரரக்கன் நகரெரித்த,*
களிமலர்த் துழாயங்கல்* கமழ்முடியன் கடல்ஞாலத்து,*
அளிமிக்கான் கவராத* அறிவினால் குறைவிலமே. 4.8.5

3205:
அறிவினால் குறைவில்லா* அகல்ஞாலத்து அவரறிய,*
நெறியெல்லாம் எடுத்துரைத்த* நிறைஞானத் தொருமூர்த்தி,*
குறியமாண் உருவாகிக்* கொடுங்கோளால் நிலங்கொண்ட,*
கிறியம்மான் கவராத* கிளரொளியால் குறைவிலமே. 4.8.6

3206:
கிளரொளியால் குறைவில்லா* அரியுருவாய்க் கிளர்ந்தெழுந்து,*
கிளரொளிய இரணியனது* அகல்மார்பம் கிழித்துகந்த,*
வளரொளிய கனலாழி* வலம்புரியன் மணிநீல,*
வளரொளியான் கவராத* வரிவளையால் குறைவிலமே. 4.8.7

3207:
வரிவளையால் குறைவில்லாப்* பெருமுழக்கால் அடங்காரை,*
எரியழலம் புகவூதி* இருநிலமுன் துயர்தவிர்த்த,*
தெரிவரிய சிவன்பிரமன்* அமரர் கோன் பணிந்தேத்தும்,*
விரிபுகழான் கவராத* மேகலையால் குறைவிலமே. 4.8.8

3208:
மேகலையால் குறைவில்லா* மெலிவுற்ற அகலல்குல்,*
போகமகள் புகழ்த்தந்தை* விறல்வாணன் புயம்துணித்து,*

நாகமிசைத் துயில்வான்போல்* உலகெல்லாம் நன்கொடுங்க,*
யோகணைவான் கவராத* உடம்பினால் குறைவிலமே. 4.8.9

3209:
உடம்பினால் குறைவில்லா* உயிர்பிரிந்த மலைத்துண்டம்,*
கிடந்தனபோல் துணிபலவா* அசுரர் குழாம் துணித்துகந்த,*
தடம்புனல சடைமுடியன்* தனியொரு கூறமர்ந்துறையும்,*
உடம்புடையான் கவராத* உயிரினால் குறைவிலமே. 4.8.10

3210:##
உயிரினால் குறைவில்லா* உலகேழ் தன்னுள்ளொடுக்கி,*
தயிர்வெண்ணை உண்டானைத்,* தடங்குருகூர்ச் சடகோபன்,*
செயிரில் சொல்லிசைமாலை* ஆயிரத்துள் இப்பத்தால்*
வயிரம்சேர் பிறப்பறுத்து* வைகுந்தம் நண்ணுவரே. (2) 4.8.11

ஒன்பதாம் திருமொழி

3211:##
நண்ணாதார் முறுவலிப்ப* நல்லுற்றார் கரைந்தேங்க,*
எண்ணாராத் துயர்விளைக்கும்* இவையென்ன உலகியற்கை?,*
கண்ணாளா! கடல்கடைந்தாய்!* உனகழற்கே வரும்பரிசு,*
தண்ணாவாது அடியேனைப்* பணிகண்டாய் சாமாறே. (2) 4.9.1

3212:
சாமாறும் கெடுமாறும்* தமருற்றார் தலைத்தலைப்பெய்து,*
ஏமாறிக் கிடந்தலற்றும்* இவையென்ன உலகியற்கை?,*
ஆமாறு ஒன்றறியேன் நான்* அரவணையாய்! அம்மானே,*
கூமாறே விரைகண்டாய்* அடியேனைக் குறிக்கொண்டே. 4.9.2

3213:
கொண்டாட்டும் குலம்புனைவும்* தமருற்றார் விழுநிதியும்,*
வண்டார் பூங்குழலாளும்* மனையொழிய உயிர்மாய்தல்,*
கண்டாற்றேன் உலகியற்கை* கடல்வண்ணா! அடியேனை*
பண்டேபோல் கருதாது* உன்னடிக்கே கூய்ப்பணிகொள்ளே. 4.9.3

3214:
கொள்ளென்று கிளர்ந்தெழுந்த* பெருஞ்செல்வம் நெருப்பாக,*
கொள்ளென்று தம்மூடும்* இவையென்ன உலகியற்கை?*
வள்ளலே! மணிவண்ணா!* உனகழற்கே வரும்பரிசு,*
வள்ளல் செய்து அடியேனை* உனதருளால் வாங்காயே. 4.9.4

3215:
வாங்குநீர் மலருலகில்* நிற்பனவும் திரிவனவும்,*
ஆங்குயிர்கள் பிறப்பிறப்புப்* பிணிமூப்பால் தகர்ப்புண்ணும்,*
ஈங்கிதன்மேல் வெந்நரகம்* இவையென்ன உலகியற்கை?*
வாங்கு எனை நீ மணிவண்ணா!* அடியேனை மறுக்கேலே. 4.9.5

3216:
மறுக்கி வல் வலைப்படுத்திக்* குமைத்திட்டுக் கொன்றுண்பர்,*
அறப்பொருளை அறிந்தோரார்* இவையென்ன உலகியற்கை?*
வெறித்துளவ முடியானே!* வினையேனை உனக்கடிமை–
அறக்கொண்டாய்,* இனி என்னாரமுதே!*கூய் அருளாயே. 4.9.6

3217:
ஆயே! இவ்வுலகத்து* நிற்பனவும் திரிவனவும்*
நீயே மற்றொருபொருளும்* இன்றிநீ நின்றமையால்,*
நோயே மூப்பிறப்பிறப்புப்* பிணியே என்று இவையொழியக்,*
கூயேகொள் அடியேனைக்* கொடுவுலகம் காட்டேலே. 4.9.7

3218:
காட்டிநீ கரந்துமிழும்* நிலம் நீர் தீ விசும்புகால்,*
ஈட்டிநீ வைத்தமைத்த* இமையோர்வாழ் தனிமுட்டைக்,*
கோட்டையினில் கழித்து* என்னை உன் கொழுஞ்சோதி யுயரத்து,*
கூட்டரிய திருவடிக்கள்* எஞ்ஞான்று கூட்டுதியே? 4.9.8

3219:
கூட்டுதி நின் குரைகழல்கள்* இமையோரும் தொழாவகை செய்து,*
ஆட்டுதி நீ அரவணையாய்!* அடியேனும் அஃதறிவன்,*
வேட்கையெல்லாம் விடுத்து* என்னை உன் திருவடியே சுமந்துழல,*
கூட்டரிய திருவடிக்கள்* கூட்டினைநான் கண்டேனே. 4.9.9

3220:
கண்டுகேட்டுற்று மோந்துண்டுழலும்* ஐங்கருவி
கண்ட இன்பம்,* தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம்,*
ஒண்தொடியாள் திருமகளும்* நீயுமே நிலாநிற்ப,*
கண்டசதிர் கண்டொழிந்தேன்* அடைந்தேன் உன் திருவடியே. 4.9.10

3221:##
திருவடியை நாரணனைக்* கேசவனைப் பரஞ்சுடரை,*
திருவடி சேர்வது கருதிச்* செழுங்குருகூர்ச் சடகோபன்,*
திருவடிமேல் உரைத்ததமிழ்* ஆயிரத்துள் இப்பத்தும்,*
திருவடியே அடைவிக்கும்* திருவடிசேர்ந்தொன்றுமினே. (2) 4.9.11

பத்தாம் திருமொழி

3222:##
ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும்* யாதுமில்லா
அன்று,* நான்முகன் தன்னொடு* தேவர் உலகோடு உயிர்படைத்தான்,*
குன்றம்போல் மணிமாட நீடு* திருக்குருகூர் அதனுள்,*
நின்ற ஆதிப்பிரான் நிற்க* மற்றைத் தெய்வம் நாடுதிரே. (2) 4.10.1

3223:
நாடி நீர் வணங்கும் தெய்வமும்* உம்மையும் முன்படைத்தான்,*
வீடில் சீர்ப்புகழ் ஆதிப்பிரான்* அவன் மேவி உறைகோயில்,*
மாட மாளிகை சூழ்ந்தழகாய* திருக்குருகூர் அதனைப்,*
பாடியாடிப் பரவிச் செல்மின்கள்* பல்லுலகீர்! பரந்தே. 4.10.2

3224:
பரந்த தெய்வமும் பல்லுலகும் படைத்து* அன்று உடனேவிழுங்கிக்,*
கரந்துமிழ்ந்து கடந்திடந்தது* கண்டும் தெளியகில்லீர்,*
சிரங்களால் அமரர்வணங்கும்* திருக்குருகூர் அதனுள்,*
பரன் திறமன்றிப் பல்லுலகீர்!* தெய்வம் மற்றில்லை பேசுமினே! 4.10.3

3225:
பேச நின்ற சிவனுக்கும் பிரமன்தனக்கும்* பிறர்க்கும்
நாயகன் அவனே,* கபாலநன் மோக்கத்துக்* கண்டுகொள்மின்,*

தேச மாமதிள் சூழ்ந்தழகாய* திருக்குருகூர் அதனுள்,*
ஈசன்பால் ஓர் அவம்பறைதல்* என்னுவது இலிங்கியர்க்கே? 4.10.4

3226:##
இலிங்கத் திட்ட புராணத்தீரும்* சமணரும் சாக்கியரும்*
வலிந்து வாது செய்வீர்களும்* மற்றுநுந் தெய்வமும் ஆகிநின்றான்*
மலிந்து செந்நெல் கவரி வீசும்* திருக்குருகூர் அதனுள்,*
பொலிந்து நின்றபிரான் கண்டீர்* ஒன்றும் பொய்யில்லை போற்றுமினே. (2) 4.10.5

3227:
போற்றி மற்றோர் தெய்வம்* பேணப் புறத்திட்டு* உம்மையின்னே
தேற்றி வைத்தது* எல்லீரும் வீடு பெற்றால் உலகில்லையென்றே,*
சேற்றில் செந்நெல் கமலம் ஓங்கு* திருக்குருகூர் அதனுள்,*
ஆற்ற வல்லவன் மாயம் கண்டீர்* அது அறிந்தறிந்து ஓடுமினே. 4.10.6

3228:
ஓடி யோடிப் பலபிறப்பும் பிறந்து* மற்றோர் தெய்வம்,
பாடியாடிப் பணிந்து* பல்படிகால் வழியேறிக்கண்டீர்,*
கூடி வானவர் ஏத்தநின்ற* திருக்குருகூர் அதனுள்,*
ஆடு புட்கொடி ஆதி மூர்த்திக்கு* அடிமை புகுவதுவே. 4.10.7

3229:
புக்கு அடிமையினால் தன்னைக் கண்ட* மார்க்கண்டேயன் அவனை*
நக்கபிரானும் அன்று உய்யக்கொண்டது* நாராயணன் அருளே*
கொக்கு அலர் தடம் தாழை வேலித்* திருக்குருகூர் அதனுள்*
மிக்க ஆதிப்பிரான் நிற்க* மற்றைத் தெய்வம் விளம்புதிரே

3230:
விளம்பும் ஆறு சமயமும்*அவையாகியும் மற்றும்தன்பால்,*
அளந்து காண்டற்கரியன் ஆகிய* ஆதிப்பிரானமரும்,*
வளங்கொள் தண்பணை சூழ்ந்த அழகாய* திருக்குருகூர் அதனை,*
உளங்கொள் ஞானத்து வைம்மின்* உம்மை உய்யக்கொண்டு போகுறிலே. 4.10.8

3231:
உறுவதாவது எத்தேவும்* எவ்வுலகங்களும் மற்றும்தன்பால்,*
மறுவில் மூர்த்தியோடொத்து* இத்தனையும் நின்றவண்ணம் நிற்கவே,*
செறுவில் செந்நெல் கரும்பொடோங்கு* திருக்குருகூர் அதனுள்*
குறிய மாணுருவாகிய* நீள்குடக் கூத்தனுக்கு ஆட்செய்வதே. 4.10.9

3232:##
ஆட்செய்து ஆழிப்பிரானைச் சேர்ந்தவன்* வண்குருகூர்நகரான்*
நாட்கமழ் மகிழ்மாலை மார்பினன்* மாறன் சடகோபன்,*
வேட்கையால் சொன்ன பாடல்* ஆயிரத்துள் இப்பத்தும் வல்லார்,*
மீட்சியின்றி வைகுந்த மாநகர்* மற்றது கையதுவே. (2) 4.10.10